திருமுல்லைவாயி லந்தாதி

ஸ்ரீ சிவஞான சுவாமிகள்
அருளியது

சிறப்புப் பாயிரம்

பொருட்டுறை மலிந்த முல்லையர் தாதி
புலவர்கட் கமிழ்தெனப் பொழிந்த
தருட்டுறை யடியர் நியமாய்ப் போந்த
வண்ணன்மெய் கண்டமா தேவன்
மருட்டுறை யொழிப்பான் வார்த்திகப் பொழிப்பான்
வகுசிவ ஞானபோ தத்தின்
றெருட்டுறை பிறங்கப் பாடிய முறையிற்
செய்சிவ ஞானவான் முகிலே.

உ

திருச்சிற்றம்பலம்

திருமுல்லைவாயி லந்தாதி

காப்பு

மல்லை வினாயக னிந்தெம்மை யாளொற்றி வைபுகல்வே
தில்லை வினாயக னனகேனு மில்லென் றிகழுலெனுஞ்
சொல்லை வினாயக னைந்திரப் போர்க்கருள் சோதிபெற்ற
முல்லை வினாயகன் முல்லையந் தாதிக்கு முன்னிற்குமே.

நூல்

திருத்தங்கு மாமுல்லை வாயிற் பிரானிரு சேவடிநீர்த்
திருத்தங்கு மார்க்கத்திற் செல்லாம லாடப்பெற் றேமினிமால்
திருத்தங்கு மாரனென் றேதிப் பிறரைப்பின் சென்றுநின்று
திருத்தங்கு மாது முனிந்தாலு னைந்துளந் தேம்பிலமே. ௧

தேங்கொன்றை யாரண வுஞ்சடை வாழ்வைத் திசையனைத்துந்
தேங்கொன்றை யாரண வல்லா ரெமைச்சினஞ் செய்துபொறி
தாங்கொன்றை யாரணஞ் செய்யாது முல்லைத் தலத்திறைவா
தாங்கொன்றை யாரண வென்றிரந் தேத்துந் தவம்பெறினே. ௨

தவலரும் பல்கலை தேர்முல்லை வாயிற் சயிலவில்லார்
சுவலரும் பல்கலை தந்திடக் கொண்டவர் தூயமதி
நுவலரும் பல்கலை நீர்முடி யாரை நுவன்றறியா
வவலரும் பல்கலை வேண்டியென் வீணி லலைவதுவே. ௩

அலைவன மந்தரங் காற்றங்கி மண்ணெனு மைந்துமல்லாத்
திலைவன மந்தரங் கத்தான மாத்திரு முல்லையின்வாழ்
தலைவன மந்தரங் காட்டுநெஞ் சுண்டு தருவிசும்பிற்
கலைவன மந்தரங் காப்பினை மாற்றுங் கருணையென்னே. ௪

கரும மலங்கொடு மாயையு நீக்கிக் கதிர்த்துவரா
றரும மலங்கொடு பாய்தடஞ் சூழ்முல்லை தன்னிலொன்றார்
மரும மலங்கொடு செற்றோன் பாச வரும்பெருமா
னரும மலங்கொடு மாமாசி லாமணி யாண்டகையே. ௫

கைதவ நாடகங் காட்டி யறிவைக் கமரகத்தே
பெய்தவ நாடக வாக்கழித் தாய்புகழ் பெற்றதொண்டைச்
செய்தவ நாடக முல்லைப் பிரான்பதஞ் சிந்தைசெய்தே
னைதவ நாடக மேயெங்கு ளானெங்க ணம்பனென்றே. ௬

எங்கணம் பன்பர சேரடி யாரி னிணைமலர்த்தா
ளங்கணம் பன்பர சேமுல்லை யாயரு ளென்றமரர்
தங்கணம் பன்பர சேய்கரத் தான்முல்லை தன்னிறையாஞ்
செங்கணம் பன்பர சேதனன் பாதமென் சிந்தையதே. ௭

சிந்தைத் திருக்கு மரமுங் களவுஞ் செறிந்தவஞ்ச
கந்தைத் திருக்கு மரநேர் விழியவர் காமங்களு
முந்தைத் திருக்கு மரன்மாய முமுடித் தாளுமொரு
விந்தைத் திருக்கு மாபதி யாமுல்லை மெய்ப்பொருளே. ௮

பொருப்புக் குழைத்த கரத்தார்வ முல்லைப் புரத்ததியான்
கருப்புக் குழைத்த கரத்தார் நகக்கலங் காதருளும்
விருப்புக் குழைத்த கரத்தார் மலர்க்குழன் மெல்லியலா
மருப்புக் குழைத்த கரத்தார் தலைமைத்தென் வாழ்முதலே. ௯

வாரம் படைத்த கருநீலக் கண்மயில் பாகரயில்
வாரம் படைத்த கருவந்த கோன்றொழு மன்னர்செய்யின்
வாரம் படைத்த கருவறப் பார்க்கிடம் வண்டொழில்செய்
வாரம் படைத்த கருவாற் குலைசெய் வளமுல்லையே. ௰

முல்லைப் பதிகமஞ் சூற்கொண்டல் சூழ்முத லின்றினும்வாழ்
தில்லைப் பதிக மடமார்பன் மூவர் திருத்தமிழின்
சொல்லைப் பதிக மலர்த்தொடை யான்றன் றுணைமலர்த்தா
ளொல்லைப் பதிக மனத்தே யமன்வரு மப்பொழுதே. கக

தேங்கடம் புந்தி கழுமலர்ச் சென்னிச்செவ் வேளைப்பெற்றோய்
தாங்கடம் புந்தி கழுமலக் கோன்றமிழ் சூடியடி
யோங்கடம் புந்தி கழுமலற் றோங்க வுயர்முல்லையா
யாங்கடம் புந்தி கழுமலத் தெவ்வற வாணைகொண்டே. கஉ

கொண்டலங் கண்டரு மால்போலு முல்லைக் குழகர்முன்னாள்
விண்டலங் கண்டரு மாலுழந் தேங்க வெகுண்டெழுநஞ்
சுண்டலங் கண்டரு மாபதி யார்முடி யூடுமதித்
துண்டலங் கண்டரு மாவா வெனைத்தொண்டு கொண்டனரே.

கொண்டா னனங்கனஞ் சக்கொடும் பார்வை குரைகடனஞ்
சுண்டா னனங்கனம் வாவியுங் காவு முலாவுமுல்லைக்
கண்டா னனங்கன கம்புத்தி முத்தியுங் காட்டவஞ்சு
பிண்டா னனங்கனற் கண்ணொடு வாழும் பெருமையென்னே, கச

பெரும்புங் கவரு மகிழ்ந்தேத்து முல்லைப்பெம் மான்களவே
விரும்புங் கவரு மதியாளர் நட்பை விழையும்வெறுந்
துரும்புங் கவரு மனமிது நீர்த்தென் றுரிசுளத்தே
யரும்புங் கவரு மவைகளு மாய வரும்பொருளே. கரு

அருவினை யேனை யெவர்புரப் பாரென் றழுங்கிநெஞ்சே
கருவினை யேனை கரமின்றித் தென்முல்லை காவலன்றாண்
மருவினை யேனை வினைகளு நீங்கினை மாற்றினையிவ்
வுருவினை யேனை யுறுதி யினியுனக் கென்குறையே. கசு

குறைமதி யாதவ மாற்றார் கேண்மைவெங் கோளர்பொய்ம்மை
மறைமதி யாதவ மாமோ பரமத மார்க்கமிந்த
மிறைமதி யாதவ மாதவர் வாழ்முல்லை மேவுமன
னிறைமதி யாதவ மால்விழி யாரை நினைநெஞ்சமே. கஎ

நெஞ்சகங் கோடி மறமே பயின்றுநன் னீர்மையின்றி
வஞ்சகங் கோடிசெய் தாலும் பொறுத்தருள் வாயையனே
யஞ்சகங் கோடிரிந் தும்பர்குன் றும லமுதுசெய்த
நஞ்சகங் கோடி வளைமுத்த மின்முல்லை நாயகனே. ௧௮

நாயகங் கைக்கிளை தாந்தெங்கங் காயுறி னுமென்செயுஞ்
ஞாயகங் கைக்கிளை மீனமெல் லாமச் சுவைகொள்ளுமோ
நீயகங் கைக்கிளை யார்சேர் கிலாமுல்லைத் தின்பதியெஞ்
ஞாயகங் கைக்கிளை யாற்பயன் கோடலத் தன்மையதே. ௧௯

தன்னக ராவது தென்முல்லை யேதன் பணிமணிகண்
மின்னக ராவது வைப்பெண் கொடியிடை வெள்விடைநஞ்
சன்னக ராவது செற்றது வாமன்பர் நால்வர்க்கறஞ்
சொன்னக ராவ துலாவென வேத்துநந் தோன்றலுக்கே. ௨௦

தோன்றற் கரிய பொருளெளி தேவந்து தோன்றிநற
ஊன்றற் கரிய குழன்மா தொடுமுல்லை யுள்ளிருந்து
கூன்றற் கரியல் பறியா முடிபுண்மை கூறியென்னை
யேன்றற் கரியய னேஞே ரழுக்கறுத் தென்பயனே. ௨௧

என்ப திகந்தனை யேந்துங் குடக்கை யிறைவனரு
ளென்ப திகந்தனை முல்லையிற் சேர்ந்திலை யித்துடக்கா
மென்ப திகந்தனை யன்புவி பொன்பொரு ளென்றழிவ
தென்ப திகந்தனை யையகொல் லோபுக லேழைநெஞ்சே. ௨௨

சேவடி வானவ ரேத்தத் திசைமுகன் றேர்செலுத்தச்
சேவடி வானரி தாங்கப் புரஞ்செற்ற தென்முல்லையாய்
சேவடி வானர மேவுங் கயிலைச் சிலம்பினர
சேவடி வானருந் தீந்தமிழ் பாடவுஞ் செய்தருளே. ௨௩

அருளா தரித்திரந் தன்புசெய் வேங்கட் கமருலகோர்
பொருளா தரித்திரந் தானிற்கு மோமுல்லைப் பொன்னையுள்ளா
மருளா தரித்திரந் தேர்ந்தறி யாரம் மடவரையே
வெருளா தரித்திரந் தோவினை காளிங்கு மேவரிதே. ௨௪

மேவருந் தென்றலுக் காற்றுதென் மான்வெம்பி னைந்துதனி
யேவருந் தென்றனக் கார்துணை யாவரென் றேங்கியிந்த
நோவருந் தென்றய னேன்விதித் தானென்று நொந்தழுமாற்
பாவருந் தென்றமிழ் முல்லைப் பிரானருள் பாலிப்பையே. ௨௫

பாலி வடகரை கோடியு மொன்றெனப் பார்ப்பவர்வாழ்
பாலி வடகரை முல்லைப் பிரான்பழி தீரவருள்
பாலி வடகரை வேலெம ரென்னினைப் பாரெனுமைம்
பாலி வடகரை யன்னையர் நேர்ந்தும் பசப்புறினே. ௨௬

உறுமா சிலாமணி மாயையென் றேகொள் ளுயிர்க்கிவற்றைத்
தெறுமா சிலாமணி வள்ளல்வெற் பாவுனைத் தேடிக்கண்ணீ
ரறுமா சிலாமணி வைத்தமண் பாவையன் னேனெனுஞ்சீர்
பெறுமா சிலாமணி கேட்குமுன் சோருமிப் பேதையின்றே. ௨௭

இன்றக லங்கல வாதொழிந் தாலு மெடுத்தசிலைக்
குன்றக லங்கல நன்கொன்றை யேனுங் கொடுத்தியன்றேன்
மன்றக லங்கல னேதுணி கட்புனல் வாரவிடா
நின்றக லங்கலர் காணுத முல்லை நிருமலனே. ௨௮

நிருதி யமனன விந்திர னாதியர் நேர்ந்திறைஞ்சிக்
கருதி யமனனர்ச் சிக்கநல் குங்கடி முல்லைத்தலை
வருதி யமனனல் காதி யுலாவரை வாழ்த்துவமிம்
பருதி யமன னயப்பே மலமலப் பாழ்ங்குழிக்கே. ௨௯

கேண்மையி னேரிய நேர்வே யிருவருங் கேழ்முளரித்
தாண்மையி னேரிய லென்றகன் றூரினிச் சார்வர் கொல்லோ
மாண்மையி னேரியன் மைந்தனுக் காவளர் முல்லையில்வந்
தாண்மையி னேரியன் மாமிடற் றூன்ற னருவரைக்கே. ௩௰

அருவருக் கத்தனி யேமலக் கூட்டி லழுந்துமென்றன்
கருவருக் கத்தனி மாலை முடித்தவன் காத்தளிக்கு
மிருவருக் கத்தனி மாசலை கேள்வனெண் ணன்பரென்னு
மொருவருக் கத்தனி நாளறுத் தான்முல்லை யூரில்வந்தே. ௩௧

வந்தனை யாற்றம வாக்கொண்டு தாளிணை வாழ்த்துமெய்த்த
வந்தனை யாற்றமர் வார்க்கருள் வான்றரு மையல்கொண்டு
வந்தனை யாற்றமர் காணிலென் னுமென்று வைதெனைத்தை
வந்தனை யாற்றம ருண்டே னருண்முல்லை வான்பொருளே. கஉ

பொருதவி சாகரஞ் சத்தியுங் கும்பனும் பொற்பழிக்க
விருதவி சாகரந் தானும் வருத்துமெய் யன்பருள்ள
மொருதவி சாகரந் தென்முல்லை யாவுடை யாருளா
ரிருதவி சாகர நெஞ்சேயல் லாற்செய வியாதுனக்கே. கங

யாதவ மாதவ னாரண னரின்று [illegible]ாடியறி
யாதவ மாதவ டன்பால் வளரெழின் முல்லையினை
யாதவ மாதவ மன்றோவென் னேரிரங் காதிருத்தல்
யாதவ மாதவர் வெற்பா வறிய வியம்புகவே. கச

இயம்புக வேதனை யாமர் திரப்பொரு ளென்றுசிறைக்
கயம்புக வேதனை வீழ்த்தோன் புகழ்முல்லைக் கண்ணிருவர்
பயம்புக வேதனை காடரி தாவளர் பண்ணவன்கா
வியம்புக வேதனை யுற்றேற் கருண்மிக வைப்பதென்றே. கரு

வைப்பது மத்தக மீதோர் விழிமுல்லை மாநகர்வ
சிப்பது மத்த கயத்துரி போர்ப்பது தேவிசர
ணப்பது மத்தகம் வைப்பார்க் கறுப்பது நான்கிரண்டு
முப்பது மத்தக வானர்க்கென் னேமையன் மூண்டதுவே. கசு

மூண்டவிக் காமன் றனக்கம் பலர்மொழி நாணரிவின்
வீண்டவிக் காமன் னவைத்தமை போர்நெடுங் காமமகத்
தீண்டவிக் காமன் வருத்தா தெமைக்கொக் கிளுன்மிடற்றிற்
றீண்டவிக் காமன் மிசைதடஞ் சூழ்முல்லைச் சிற்பரனே. கஎ

பரம்பரன் பண்டரங் கன்முல்லை வாணனென் பார்க்குணமு
கிரம்பரன் பண்டரங் கன்றேட நீண்ட நிமலனெண்டிக்
கொரம்பரன் பண்டரங் கண்டோதும் பத்திர வுத்தமயாம்
கரம்பரன் பண்டரங் கஞ்சே ரருட்கட னந்தெய்வமே. கஅ

நந்த மருமந்த மெய்வாழ்வு மற்றை நலங்களுந்தி
கந்த மருமந்த வான்புகழ் சேர்முல்லைக் கண்ணிருந்த
பந்த மருமந்த மெல்விரல் பாகன் பகைவருரஞ்
சிந்த மருமந்த னைப்போழுஞ் சூலத் திருக்கரனே. ௩௯

திருமுலை வாயின் மருவுமெந் தாயிளஞ் சேய்க்கமுது
தருமுலை வாயின்வைத் தாலன்றி யுண்ணுந் தகுதியுண்டே
வருமுலை வாயினற் பட்டமுந் தாதெமை யாண்டுமென
மிருமுலை வாயின் மெழுகா யுருகச்செய் தேன்றுகொள்ளே. ௪௰

கொள்ளுந் திகம்பர முல்லைப் பிரான்பைங் குழவிநிலா
வெள்ளுந் திகம்பர வுஞ்சடை யான்வெற்பி னீர்ச்சுழியைத்
தள்ளுந் திகம்பர நேர்களங் கண்ணி தருநலத்திற்
குள்ளுந் திகம்பர மெல்லா மதிப்பினு மொப்பல்லவே. ௪௧

அல்லியந் தாமரை யாளிட மோர்பொழு தவ்வளம்போய்
வல்லியந் தாமரை யாளிட மாமதை வாழ்த்திடன்மின்
பல்லியந் தாமரை யாமத்தி னுங்கண் படாமுல்லையார்ப்
புல்லியந் தாமரை யாசையின் வாழ்த்தும் புலவர்களே. ௪௨

புலத்தலை வாவினி யாற்றேமென் றெய்துநர் புந்திவெந்திப்
புலத்தலை வாவினுங் கைகொடுப் பார்முல்லைப் பூவைவிடு
புலத்தலை வாவிநன் னீர்விளை யாடிப் புணருதும்வா
புலத்தலை வாவிங்ங னென்றருள் வாய்மலர்ப் பூங்கொடியே. ௪௩

கொடியானை யந்தநல் லூரனை யாண்டநங் கோனைமதக்
கொடியானை யந்தக னைச்சீறி முல்லையுட் கோவைமுல்லைக்
கொடியானை யந்தப வாண்டானை யீண்டுறற் குக்கரைந்தாற்
கொடியானை யந்தமுன் ளாய்க்கிடு வேன்கொளு மூன்பலியே. ௪௪

ஊன்காளத் திக்குச் சுவையுள தோதின் னுடற்கறைக்கா
னுன்காளத் திக்குத் தெளிவுள தோமுல்லை நாயகனெங்
கோன்காளத் திக்குத் தரனலம் யானறி கொள்கையல்லான்
மான்காளத் திக்குக் கியாராவர் போலுமற் றெங்கையரே. ௪௫

லைக்க விகமக னைந்தழுங் கிக்கலங் காதருள்சேர்
கைக்க விகமக வாதியி லாசை கருத்துள்ளுக
கைக்க விகமக ஞாதியர் வாழ்முல்லை காவலன்புன்
லைக்க விகமக வுங்கொடு பாய்கழுக் குன்றனையே. ௨௬

குன்றத்தஞ் சாதி மலர்க்கூந்தன் மாதிடங் கொண்டிருந்த
னன்றத்தஞ் சாதி வழாமுல்லை வாண னடித்தனன்றென்
மன்றத்தஞ் சாதிநெஞ் சேகமக் கென்குறை வாழ்வுபெற்றேம்
பின்றத்தஞ் சாதிரி மாயாவென் றேவெற்றி பேசுவமே. ௨௭

பேசித் திருந்தாம் முல்லையில் வந்தெனைப் பேணித்தொண்டர்
பூசித் திருந்தம் வினைதீர்த்து மென்றருள் பொற்பர்வெற்பி
னேசித் திருந்தண் புனலீர்க்கும் போதுற்று நேர்ந்தெடுத்தா
ராசித் திருந்த படிபோ லொருவரஞ் சாதியென்றே. ௨௮

சாதிப் பரிய தவத்தார்க்கு முல்லைத் தலத்தினுண்மை
போதிப் பரிய னலம்பாடு தும்புல் லறிவுபரம்
பாதிப் பரிய மனைதோறும் வண்டு பகர்ந்ததுமுன்
காதிப் பரிய களிற்றுரி போர்த்ததுங் கட்டுரைத்தே. ௨௯

கட்டோம் புதலெனக் காமாதி யாறுங் கரிசறுத்தோ
முட்டோம் புதவு திறந்தின்ப வீடுபுக் குச்சரித்தோஞ்
சிட்டோம் புதல்விமன் ணேருந்தி கஞ்சந் தெளிவின்முன்பின்
விட்டோம் புதலுறு கள்ளெழுத் தான்முல்லை மேவப்பெற்றே. ௩௰

பெற்ற வரம்பல வுங்குன்ற யான்பிணை போல்வெருள
வுற்ற வரம்பலங் கோதவென் பேதை யொருதனியே
முற்ற வரம்பல செய்தகன் றாளென்னை முல்லைப்பிரான்
கற்ற வரம்பல வற்பணி யாரிற் கடுஞ்சுரமே. ௩௧

கடுத்தியம் பாம்பன் மலரானை யாது கவலைநெஞ்சே
விடுத்தியம் பாம்பனல் வாயாற் புகழ்ந்தின்று மேவுதுமுட்
படுத்தியம் பாம்ப லுரிபிறை மான்வெம் பரசொடுந்து
வடுத்தியம் பாம்பணி முல்லையு ளம்பல வாணனையே. ௩௨

அம்பல வாணன் மடவார் விழியென் றழிந்துழலு
மம்பல வாணங் கனையலி யாகி யமர்ந்தருளு
மம்பல வாணன் றிருமுல்லை வாயி லழகன்றில்லை
யம்பல வாணன் வழியினில் லாவென் னறிவுகளே. ருங

அறிவறி யாக மெதுவது வாகமல் லாதவென்னுங்
குறிவறி யாகடி முல்லையிற் சேர்புழுக் கூட்டைவிண்டு
தறிவறி யாகஞ்செ யன்பா லெனையர்ச் சனைசெயுன்பாற்
செறிவறி யாகந் தருவலென் றுண்டனன் சின்மயனே. ருச

மயங்கா துவரை யும்பொய்ப் பொருளியாவும் வரையச்செய்ய
பயங்கா துவரையுண் மால்போற்று முல்லைநம் பாவிழிப்பங்
கயங்கா துவரையு நீள்சீர்க் கொடியிடை காதலசூர்
சயங்கா துவரையு மைங்கர ஞரையுந் தந்தவனே. ருரு

தவத்துக் கணிகல னட்டோனென் றேரிற் றவறுமவை
பவத்துக் கணிகல னெஞ்சே யிவைவிடப் பார்வடிவ
நவத்துக் கணிகலன் மாவாக்கு முல்லையி னனரியா
யவத்துக் கணிகலந் தோர்பான் மருவுமெம் மண்ணலையே. ருசு

அண்ணலந் தோய மனைவீட்டி முல்லையி லார்ந்ததுவு
மெண்ணலந் தோய முடித்தது மற்றெம் மிறைவியைப்போ
லுண்ணலந் தோய விழைந்திரந் தேங்கி யுளைந்துநந்தம்
பெண்ணலந் தோய வெளிவந் தருளுமெய்ப் பேறன்றியே. ருஎ

அன்றினங் காதர மாய்நின்று கத்து மலைகடலெம்
முன்றினங் காதர வத்துக் களவில மூரிமதன்
கன்றினங் காதர வாருள ரோவிரு கண்ணுந்துஞ்சா
வின்றினங் காதர மாமுல்லை வாணமற் றெங்களையே. ருஅ

களைகண் டனம்புய மாமுல்லைக் கோன்வெற்ப காதன்மிக்க
கிளைகண் டனம்புயன் மேவுந் தடவரைக் கீழொருசார்
விளைகண் டனம்புயங் கஞ்சேல்வல் வேய்சொன் னடைநிதம்பந்
திளைகண் டனம்புய மாக்கொண்டு நிற்குமோர் தீங்கரும்பே. ருகூ

நீங்கரும் புங்கவ ரூடிப் பயனிலை செப்பின்மின்னூர்
தாங்கரும் புங்கவ லாக்கனி யும்மெனச் சாற்றியங்தோ
நீங்கரும் புங்க வசையுறு வீர்முல்லை நீணகரின்
பாங்கரும் புங்க வரும்போற்று மீசனைப் பாடுமினே. ௬௰

பாடக மன்ன வருந்துயர் தீரப் பரன்புகழ்வாய்
பாடக மன்ன வருங்குணம் போனலம் பார்த்தெடுத்துப்
பாடக மன்ன வருளான்றன் பாற்பைங் கொடியிடையென்
பாடக மன்ன வரும்போற்ற வாழ்முல்லைப் பண்ணவனே. ௬௧

பண்ணகங் காரிகை பான்முல்லை வாயும் பதிந்திருந்தோய்
வண்ணகங் காரிகை மற்றுமென் போற்பகர் வாரிலையென்
றெண்ணகங் காரிகை தாவா தியற்று மிருவினையார்
திண்ணகங் காரிகை தீண்டுமென் தாய்கெடச் செய்தருளே. ௬௨

செய்தவ மாயத்தன் செல்வமு நீயெனச் சிந்தைசெய்யா
தெய்தவ மாயத்தன் மங்கலை மாற்றி யியற்றுமென்றன்
கைதவ மாயத்தன் மைக்கோ ளவில்லை கண்ணருளாற்
பொய்தவ மாயத்தன் முல்லையு ளாய்நலம் போதிப்பையே. ௬௩

திப்பிய மாவடு தண்டுறைக் கண்ணுந் திருந்துநிலை
தப்பிய மாவடுத் தீர்முல்லை யூரினுஞ் சந்தமுலை
யப்பிய மாவடு வார்கண்ணி பாக னமர்ந்துபுகழ்
பப்பிய மாவடு நாமமொன் றுக்கொண்டு பாரிப்பதே. ௬௪

பாரகந் தைக்கு மரும்புகழ் சேர்முல்லைப் பாலவருள்
பாரகந் தைக்கு மதியார்பின் சென்றுதன் பாவிநதிப்
பாரகந் தைக்கும் வழியின்றி வாடும் பரிசுநன்றே
பாரகந் தைக்குமைக் குங்கயஞ் செற்ற பராபரனே. ௬௫

பரங்கிரி யாவிகள் சூழ்முல்லை போற்பரிந் தென்னுளமா
மரங்கிரி யாவிடை யாரு ளுண்மை யறிவினின்ற
வரங்கிரி யாவியி னுன்னை யழுத்தும் வகையறியேன்
சிரங்கிரி யாவிதி யாற்றுஞ்செல் லேனுய்யுஞ் செய்கையென்னே.

செய்வசித் தாந்தமிழ் முல்லையு ளீசசெவ் வேமாய
வைவசித் தாந்தம் பொருளோர் துடைய வவற்றிரண்டு
னைவசித் தாந்தவிர் மூன்றுமொன் றென்றி னனுகுமென்னுஞ்
சைவசித் தாந்த நெறியுப தேசந் தனையெமக்கே. ௬௭

தனையரி யானன நான்கானுந் தேடிடத் தான்முடியாஞ்
சினையரி யானன மார்தடஞ் சூழ்முல்லைச் சிற்பரனென்
வினையரி யான னருள்சேர்ந்து நீயொரு மின்னனின்விழி
யினையரி யானன னேர்மெழு காயினென் னெம்பிறிதே. ௬௮

தேவருந் தானவ ருங்காரி கண்டஞ்சித் தீவினையா
னேவருந் தானவ னும்பகுப் பற்றவர் நேர்முல்லைநம்
பாவருந் தானவ வென்றே விடப்பண் டருந்தியுமந்
தோவருந் தானவ மீதறி யார்சிலர் தொண்டர்களே. ௬௯

தொண்டைய நாடுகெ டரச்செய் யாமற் றுவரிதழ்வாய்த்
தொண்டைய னாடு மலர்க்கூந்த லார்க்குடைந் தும்பிழைத்தேன்
றொண்டைய னாடு புகழோங்கு முல்லையிற் றோன்றுமுருத்
தொண்டைய னாடு மலரடிக் கீழின்று தொண்டுசெய்தே. ௭௦

செய்யுடை யல்குலைக் காட்டி மயக்குநர் தீமைகெடச்
செய்யுடை யல்குலைப் பால்வளை வெண்ணித் திலம்பரப்புஞ்
செய்யுடை யல்குலை யாவள முல்லையிற் சேர்ந்துபகர்.
செய்யுடை யல்குலைத் தாரானைப் பால்வைத்த தேவைநெஞ்சே.

நெஞ்சல மந்திரங் கக்கூற்றந் தோன்றினு நெக்குருகி
யஞ்சல மந்திரந் தான்முத லாறுமற் றேமறுத்தேஞ்
சஞ்சல மந்திரம் பெற்றுள முல்லைத் தலத்தழகு
துஞ்சல மந்திரந் தன்னிலெங் கோனைத் துதிக்கப்பெற்றே. ௭௨

பெற்றத் திருந்துறு வாழ்வெமக் கீயப் பெருகுவள
முற்றத் திருந்துறு முல்லையின் முல்லையின் முல்லையில்வாழ்
நற்றத் திருந்துறு நீர்வேணி யீர்நள்ளு மன்பரென்னுஞ்
சுற்றத் திருந்துறு கண்டீர்த் தெமைத்தொண்டு கொள்ளுமினே.

மின்பங்கம் பொன்றுந்து மேருவில் லோடமர் வேதியவென்
றன்பங்கம் பொன்றுந் துறைகாட்டி முத்தியிற் சாரவரு
ளன்பங்கம் பொன்றுந் துபியோசை யென்று மருமுல்லையா
யின்பங்கம் பொன்றுந் துவர்க்கையற் றீந்தரு ளென்னரசே. எச

அரங்கர் திருவம் பலமுக்க ணானுக் கமர்விடஞ்சி
சிரங்கர் திருவம் பலர்தொறும் வாழ விலங்கும்பிர
மரங்கர் திருவம் பலபாடும் வாவிகண் மல்குமுல்லைப்
புரங்கர் திருவம் பலங்குங் கொடியிடைப் பூண்முலையே. எரு

பூண்டிலஞ் சித்தத்து மெய்யன்பெவ் வாறினிப் பொன்பெண்
ணாண்டிலஞ் சித்தத் துவங்கடந் தானந்தர் தோய்வுறலூர்[மண்ணார்
பாண்டிலஞ் சித்தத்து வாத்துடக் கொக்கப் பறித்தருள்வா
யாண்டிலஞ் சித்தத்து நீர்புடை சூழ்முல்லை யங்கணனே. எசு

அங்கங் கரகரவென் றோதம் போலொலி யார்ப்பவன்பர்
சங்கங் கரகர கத்தோர் துதிக்கத்தண் ணீற்றினொளி
பொங்கங் கரகர முல்லையு ளாரெனைப் பொத்திக்கொண்ட
பங்கங் கரகர நின்றா லுனைப்பற்றிக் கொல்லுவரே. எஎ

பற்றிக்கொல் லாதொழி வேனோ வினிமலப் பாவமறங்
கற்றிக்கொல் லாருலை வேற்கண்ணி பால்கவர் முல்லைப்பிரான்[ன
பெற்றிக்கொல் லாதவர் போலென் றனையெண்ணும் பேதையென்
முற்றிக்கொல் லாம்வரு கின்றனை பாரின்றென் முன்னர்வந்தே.

வந்தியன் றேவரை நின்னன்றி யான்முல்லை வாணவென்னோ
வந்தியன் றேவரை யாதரு ளாமைமண் முற்றும்பெற்றும்
வந்தியன் றேவரை மாமாது நீயுமவ் வாறுநின்செவ்
வந்தியன் றேவரை வாட்கரித் தான்கெட வைத்தவனே. எகூ

வைத்தலை வாளி நிகர்விழி யான்மத னம்புடல்சு
வைத்தலை வாளினி யாற்றகில் லான்மன்னச் செய்தியருள்
வைத்தலை வாளினி தார்முல்லை வாண மதிக்குடைக்கோ
வைத்தலை வாளினி லேற்றன்றிச் சாந்தம் வாரதிவட்கே. அ௦

வட்காத கைதவ ரூரெரித் தாயுன்னை வாஞ்சித்தவி
வட்காத கைதவ மிக்கோர் புகழ்மணி வார்த்தைநிறை
யுட்காத கைதவ வாணர்கள் வாழ்முல்லை யுத்தமனே
யுட்காத கைதவன் கைப்பிரம் பாலடி யுண்டவனே. அக

உண்டாயி னந்த மயல்செய்வ தென்னினி யோநெஞ்ச
முண்டாயி னந்தம தாண்டவன் முல்லை யுருருறும்புன்
கண்டாயி னந்தமர் போல்வந்தெம் மான்கண் ணருள்புரிந்தான்
கண்டாயி னந்தம மேயுனக் கீங்கென்ன காரியமே. அஉ

மேதக்க சிந்தனைத் தாபதர் வாழ்முல்லை மேவுநம்ப
வாதக்க சிந்தனைத் தாவீர மென்றட்டு மன்மதனைக்
காதக்க சிந்தனைத் துங்குடி யார்முடிக் கண்ணுதலென்
றோதக் கசிந்தனைக் கென்னெஞ்ச மேகுறை யோதுதியே. அங

துதிப்பருந் தாதவிழ் பூம்பொய்கை சூழ்முல்லைத் தொன்னகர்வாழ்
மதிப்பருந் தாதகி கொன்றைச் சடாதர வானியங்குங்
கதிப்பருந் தாதர வாயென் னுடம்பிற் கசியும்புலாற்
குதிப்பருந் தாதமுன் வந்தென் றனைத்தொண்டு கொண்டருளே.

அருந்துதி யானன்பி னேத்தவைத் தாரருள் கற்பினல
மருந்துதி யானம் புவிக்களித் தாரரு ளாரமுதை
யருந்துதி யானம் புரிமன மேவிரைந் தாள்வரெம்மை
யருந்துதி யானன் கவர்முல்லைக் கேசொல்லு மவ்வெண்ணமே.

எண்ணப் படிகடி யாதன்பர்க் கீந்தெழின் முல்லையினுங்
கண்ணப் படிகடி யானத்துந் தோன்றமிக் கான்கழற்கீழ்
நண்ணப் படிகடி நெஞ்சே யவனம் பிழையெண்ணினுந்
தண்ணப் படிகடி தாறுதல் போலுமத் தன்மையனே. அசு

அத்தன்மை யாந்தெரி யற்குழ லாரமர் முல்லைநில
யத்தன்மை யாந்தெரி மூழ்காம லுண்மை யருவுருக்கா
ரத்தன்மை யாந்தெரி யக்குரு வாய்வந் தனைத்துமல்லா
வத்தன்மை யாந்தெரி வைபாகத் தாமறி யென்றனனே. அஎ

அறிவென் றவவழிச் செல்லார் தமையு மடக்குங்கண்ணாய்
குறிவென் றவவடி யேற்களித் தாயிணைக் கூற்றின்மையாற் [வைச்
பொறிவென் றவவர் பெரும்பேற்றை யொக்குமிப் பொன்னுரு
செறிவென் றவவலி யென்றோவெம் மான்முல்லைத் தீங்கரும்பே.

கருப்பர்தங் குங்குறி யான்முல்லை வாண கதிகடோறுந்
திருப்பர்தங் குங்கு மலமரல் போன்று தெரிவையரைப் [ழிப்பா
பொருப்பர்தங் குங்குமக் கொங்கையென் றோதிப்பொய் யாதொ
யுருப்பர்தங் குங்குலி யக்கல யன்றொழு முத்தமனே. ௯

தமக்கடி யாகவை யொன்றித் தவஞ்செய்யுந் தன்மையிலா
தமக்கடி யாக முதலோரைச் சாரத் தருமுனக்குத்
தமக்கடி யாக மறையாளர் முல்லைத் தலத்திறைவர்
தமக்கடி யாகமெய்த் தொண்டுசெய் வேங்களைச் சார்வரிதே. ௧௰

சார்வருர் திப்பிய மால்கொள்வ தென்னைதன் முல்லைநகர்ச்
சார்வருர் திக்குடை யார்செயல் கேட்டி தருவர்கட
மூர்வருர் திக்கெடப் புன்மூரல் கொள்ளுவ ரோரெருதை
யூர்வருந் திப்புனல் சூடுவ ராடுவ ரொண்ணுதலே. ௧௧

ஒண்ணுத லங்கனை மாரிடந் தோறு முவந்துநடம்
பண்ணுத லங்கனை யக்குழைத் தார்முல்லைப் பாடியினை
யண்ணுத லங்கனை யானைத் தொழுவிவை யன்றிநெஞ்சின்
கண்ணுதலங்கனை முன்னீ ருலகிற் கருமங்களே. ௧௨

மங்கள மேவியன் முல்லைப் பிரானின்று வைத்தனன்கா
மங்கள மேவிய ளுட்டத் தவர்பொய் மலமதங்கன்
மங்கள மேவிய செய்தெனை வாட்டு மனமினிநீ
மங்கள மேவிய புன்புதன் மான வலியிழந்தே. ௧௩

இழவாதென் போத மிழப்பித்த முல்லைக் கிறையவனைத்
தொழவாதென் போதகங் கைக்கொண்டென் றன்மைத் துரிசுகளி
னுழவாதென் போதமெய் யன்புசெய் வீணி லுழலுமிந்தப்
பழவாதென் போதவிர் நெஞ்சே யுனக்கிது பண்பல்லவே. ௧௪

அல்லாக் குமாரிரு ணெஞ்சே தொழும்பர்க் கடித்தொழில்செ
யல்லாக் குமாரியென் றேத்தே லகிலமு மீன்றுமுதிர்
வல்லாக் குமாரிதன் பங்காள னீல வரங்கமெல்லை
யல்லாக் குமாரிய முல்லைப் பிரானடிக் கன்புசெய்யே. கரு

அன்புடை யாளியங் காக்குறுங் கானத்தி வல்சியெனத்
தன்புடை யாளியங் காக்கு மதர்தனி யெய்தவிவ
ளுன்புடை யாளியங் காக்கு மொலிமுல்லைத் தோன்றலதள்
வன்புடை யாளியங் காக்கு மிடறன்ன வல்லிருளே. கசு

வல்லியம் போதக வண்டோ டொலிக்கும் வளமுல்லைவாழ்
வல்லியம் போதக மாய்த்த பிரான்வரை மேலிடையோ
வல்லியம் போதக வாம்விழி தாமிந்த வார்முலையோ
வல்லியம் போத கரக்குழ லாய்திரு வாய்மலர்ந்தே. கஎ

வாயானஞ் சக்கர மால்விடை யாவைத்த முல்லைப்பிரான்
வாயானஞ் சக்கர மோதித் தொழாத வறியர்க்கெய்த
வாயானஞ் சக்கர மீதுண வேந்தி மயிலைத்துறை
வாயானஞ் சக்கர வாதழ லாய்வரு மம்புலியே. கஅ

அம்ப வளவள வாயெனக் கும்முல்லை யாளர்வில்லி
னம்ப வளவள வாம்விழி யெங்கைக்கு மன்புவைத்த
நம்ப வளவள வாச்சொரி பாலொக்கு நட்பறியாய்
நம்ப வளவள வாவே தகுமிங்கு நண்ணலையே. கக

நண்ணத் திருவள வானந்த வீட்டி னயந்தெண்ணிடு
மெண்ணத் திருவள கத்திகழ்ந் தேகி யிரும்பரிதி
வெண்ணத் திருவளர் கையேந்தி காணரும் வேந்தனமர்
திண்ணத் திருவள முல்லையிற் சேர்மின் றிருத்தகவே. உ0

திருமுல்லைவாயி லந்தாதி

முற்றிற்று.

திருமுல்லைவாயிலந்தாதி

அருஞ்சொற்பொருளகரவரிசை

அகரு-அகில், ௰
அங்கண்-அவ்விடத்து, ௭
அங்காப்பு - வாய்திறந்தழுதல், ௬
அடகு-இலக்கறி, ௨௬
அம்பரம்-ஆடை, ௩௮
அம்பல்-பழிமொழி, ௫௪
அம்பு-நீர், ௰
அரி-வண்டு, ௩௭; வரி, ௬௮
அரு-கட்புலனாகாதது, ௮௭
அருக்கமாலை-எருக்கம்பூ மாலை, ௩௧
அல்கு-தங்கிய, ௭௧
அல்லாக்கும்-சுழலும், ௯௫
அலங்கு-விளங்குகின்ற, ௰௩
அலம்-அமைந்த, ௧௩
அலமரல்-சுழலல், ௮௯
அவிக்காம்-கெடுக்கமாட்டோம், ௩௭
அழுக்கறுத்து -அழுக்காறுற்று; பொறாமைப்பட்டு, ௨௧
ஆசு-குற்றம், ௨௭
ஆம்பல் அல்லி, ௫௨
ஆர்ப்ப-ஒலிக்க, ௭௭
ஆரியம்-பெருமை, ௯௫
இகம்-இம்மை, ௪௯
இயல்-பொருந்திய, ௩௰
இரங்கும்-ஒலிக்கும்; இங்குப் புகழும் என்னும் பொருளில் வந்தது, ௭௫
இவறி-விரும்பி, ௫௪
ஈண்டு-விரைவு, ௩௭
உக-சொரிய, தொடக்க, ௩௫
உட்காத-குன்றாத, ௮௧
உம்பல்-யானை, ௩
உரு-உடல், ௮௯
உலைவு-அச்சம், ௪௰
உவளகம்-உள்வீடு, ௱
உறுகண்-துன்பம், ௭௩
ஐம்பால-கூந்தல், ௨௬
கடுத்தி-சினப்பாய், ௫௨
கதிர்த்து-செருக்கி, ௫
கந்து-கட்டுத்தறி, ௬௫
கம்பு-சங்கு, ௪௧
கமடம்-ஆமை; இங்கு ஆமையோடு, ௧௧
கமம்-நிறைவு, ௧௧
கமரகம் பிளவிடம், ௬
கமை-பொறுமை, ௯௰
கரிசு-குற்றம், ௫௰
கரு-பிறப்பு, ௧௬
கழுமல்-மயக்கம், ௧௨
களம்-வஞ்சகம், ௯௩
கனிந்து-இரங்கி, ௧
காதரம்-துன்பம், ௫௮
காது-தாக்கும், ௪௯; கொல்லும், ௫௫
காரிகை-கட்டளைக் கலித்துறை, ௬௨
கு-கீழ்மை, ௧

குடங்கை-உள்ளங்கை, ௨௨
குமைக்கும்-கொல்லும், ௬௫
குலை-கரை, ௰
குழகர்-அழகர், ௧௩
கேழ்-ஒளி, ௩௰
கைதவம்-வஞ்சகம், ௬
சயிலம்-மலை, ௩
சுவல்-பிடரி, ௩
செய்-செவ்விய, ௭௧
செறிந்த-மிக்க, ௮
தத்தும்-தாவும், ௭௩
தப-கெட, ௪௪
தமம்-இருள், ௮௨
தருமம்-இயல்பு, ௫
தவ-மிகுதியும், ௧௭
தவல்-கெடுதல், ௩
தாபதர்-துறவினர், ௮௩
திப்பியம்-சிறப்பு, ௬௪
திரம்-துணிவு, ௨௪
திரு-அழகு, ௧
துத்தி-பாம்பின் படப்பொறி. ௫௨.
துவள்-அசைகின்ற, ௫௨
தேரியல்-மலர்மாலை, ௮௭
தெவ்-பகைமை, ௰௨
தெறும்-கெடுக்கும், ௨௭
தைவந்து-தடவி, ௩௨
தோம்-குற்றம், ௫௰
தோய்வுறல்-மூழ்குதல், ௭௬
நல்-அழகிய, ௫௩
நலம்-இன்பம், ௫௭; நன்றாக, ௬௧
நள்ளும்-நட்புக்கொள்ளும், ௭௩
நறவு-தேன், ௨௧
நாட்டம்-கண், ௬௩
நுதலம்-குறிக்கொளேம், ௧௨
நைகரம்-வருத்தம், ௧௬
பரசு-மழுப்படை, ௭
புதவு-கதவு, ௫௰
புளரி-தாமரை, ௩௰
மூரல்-இளநகை, ௬௧
மேவரும்-விரும்புதற்குரிய, ௨௫
யாளி-சிங்கம், ௬௬
வட்காத-கெடாத, ௮௧
வடகு-தோல், ௨௬
வடி-தெளிவு, ௨௩
வண்ணம்-முடுகியற் பாக்கள் ௬௨
வம்பு-முலைக்கச்சு, ௭௫
வல்-சூதாடு கருவி, ௫௬
வல்சி-உணவு, ௧௬
வள்-மிக்க, ௬௧
வாண-வாழ்ந, ௭௬
வார-ஒழுக, ௨௮
வாரம்-அன்பு, ௰; நீர், ௰
வான்-மேம்பாடு, ௨௩
விருது-வெற்றி, ௩௩
வென்-முதுகு, ௮௮